**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**
**CC.NO- 118/2023**
**Dated :29.04.2026**
**Deposition of witness for : P.W.1**

**List of Witness LW1 Examined as PW1 (Defacto Complainant)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கருப்பையா | வயது | : | 40 |
| தந்தை பெயர் | : | தெட்சிணாமூர்த்தி | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | மஞ்சப்பேட்டை | தொழில் | : | கிராம நிர்வாக அலுவலர் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.
**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜரில்லை. அவரது சார்பில் பிரிவு சார்பில் பிரிவு 355 BNSS- ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)
சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு

முதல் விசாரணை

நான் தற்போது கந்தர்வகோட்டை தாலுகா மஞ்சப்பேட்டை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 29.04.2021 ஆம் தேதி வீரடிப்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தேன். அன்றைய தினம் காலை சுமார் 10.00 மணியளவில் கிராம உதவியாளர் எனக்கு போன் மூலமாக பகட்டுவான்பட்டி கிராமத்தில் தாமரைச்செல்வன் என்பவருக்கு சொந்தமான சர்வே எண் 204/1 என்ற புஞ்சை இடத்தில் கொத்தடிமைகளாக நபர்கள் வேலை செய்கிறார்கள் என்று சொன்னார். நான் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று அங்கு இரண்டு குடும்பங்கள் கரும்பு வெட்டும் கூலி தொழிலாளியாக கொத்தடிமைகளாக இருந்தார்கள். அதில் பெரியவர்கள் 4 நபர்கள், குழந்தைகள் 3 நபர்கள் இருந்தார்கள். அவர்களை மீட்டு கந்தர்வகோட்டை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அழைத்து வந்து அவர்களுக்கு உணவு கொடுத்தோம். அவர்களை புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியரிடம் அழைத்து சென்று வருவாய் கோட்டாட்சியரிடம் சான்று பெற்று அவர்களை வேன் மூலமாக வந்தவாசி வருவாய் கோட்டாட்சியரிடம் ஒப்படைத்தோம்.

பாதிக்கப்பட்ட நபர்களை விசாரித்த போது அவர்களை கடலூர் மாவட்டம் செட்டியாப்பட்டியைச் சேர்ந்த திரிவேதி மகன் தங்கச்செட்டியார் என்பவர் அழைத்து வந்து கொத்தடிமைகளாக வைத்து வேலை வாங்கியதாக தெரிந்துக்கொண்டேன். பின்னர், இது சம்மந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கந்தர்வகோட்டை காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு

நான் கொடுத்தது தான். (மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரிதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். போதிய வாய்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

மறுவிசாரணை- இல்லை.

சாட்சியின் கையொப்பம்

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.04.29 16:39:32 +0530

என்.சிவபழனி,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கந்தர்வகோட்டை.